காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

மேற்கு வங்கத்தில் ரூ.75,000 கோடியில் புதிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்: மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அறிவிப்பு



சென்னை – 27 நவம்பர், 2026 மேற்கு வங்கத்தில் ரூ.75,000 கோடியில் புதிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்: மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அறிவிப்பு.

மேற்கு வங்கத்தில் ரூ. 75,000 கோடி மதிப்பில் புதிய சாலை உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம், கிழக்கு மிட்னாப்பூர் மாவட்டம், கொலாகட்டில் இன்று (26.11.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ. 8,700 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான 22 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை அவர் தொடங்கி வைத்ததுடன், புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய நிதின் கட்கரி, சாலை வசதிகள் தொழில் வளர்ச்சி, வர்த்தகம், விவசாயம், சுற்றுலா ஆகியவற்றை மேம்படுத்துவதுடன், முதலீடுகளை ஈர்த்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தில் அண்மையில் ரூ. 40,000 கோடி மதிப்பிலான நெடுஞ்சாலைப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், ரூ. 35,000 கோடி மதிப்பிலான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டங்கள் அண்டை மாநிலங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், தொழில் மையங்கள் ஆகியவற்றுடனான போக்குவரத்தை மேம்படுத்தி, வர்த்தகம், சுற்றுலா, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று நிதின் கட்கரி தெரிவித்தார்.

திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த நிலம் கையகப்படுத்துதல், தேவையான அனுமதிகளை வழங்குதல் ஆகியவற்றில் மாநில அரசு தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் நிதின் கட்கரி கேட்டுக்கொண்டார்.